**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6**

**ந.க.எண்.41268 / அ1 / இ2 / 2020 நாள் 28 .11.2020**

பொருள்: பள்ளிக் கல்வித் துறை – அலுவலக நிர்வாகம் – திண்டுக்கல் மாவட்டம் – பழனி கல்வி மாவட்டம் – மாவட்டக் கல்வி அலுவலர் – அலுவலக ஈப்பு – இணை இயக்குநரால் பயன்படுத்துவது – சார்ந்து.

பார்வை: திண்டுக்கல் மாவட்டம், பழனி மாவட்டக் கல்வி அலுவலரின் நே.மு.கடித எண்.3189/அ1/2020 நாள் 03.10.2020

---

சென்னை – 6, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கக, இணை இயக்குநர் திரு சி.செல்வராஜ் அவர்கள் பள்ளிகளில் பணிபுரியும் அலுவலகப் பணியாளர் மூலம், முன் அனுமதி பெறாமல் மற்றும் முன் அறிவிப்பு ஏதுமின்றி பழனி, மாவட்டக் கல்வி அலுவலகத்தின் ஈப்பு (TN 57 G 0834) வாகனத்தைப் பயன்படுத்துவதாக புகார் பெறப்பட்டுள்ளது. இதனால் பழனி கல்வி மாவட்டத்திற்குட்பட்ட தேர்வு மையங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் கூட்டத்திற்கும், பள்ளிகளின் பார்வைக்கு செல்ல இயலாத நிலையில் சிரமமான சூழ்நிலை உள்ளது என்றும் பார்வையில் காணும் நேர்முக கடிதத்தில் பழனி மாவட்டக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

எனவே, இனி வரும் காலங்களில் மாவட்டக் கல்வி அலுவலர்களின் ஈப்பு வாகனத்தை உரிய அலுவலர்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இனி வருங்காலங்களில் இது போன்ற புகார்களுக்கு இடம் கொடாமல் செயல்படுமாறு உரிய அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

**பெறுநர்**

மாவட்டக் கல்வி அலுவலர்,
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

**நகல்**

திரு சி.செல்வராஜ்
இணை இயக்குநர்
பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்,
சென்னை – 6